தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை

2005-2006

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக
அச்சிடப் பெற்றது

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2005 - 2006

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஆண்டறிக்கை 2005-2006
பொருளடக்கம்

வரிசை எண்.	பொருள்	பக்கம்
(1)	(2)	(3)
1	செயல்களும் கடமைகளும்	2-4
2	நேரடித் தேர்வுகள்	5
3	தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை	5
4	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன	5-8
5	தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள்	8
6	அரசும் தேர்வாணையமும்	9-12
	பின் இணைப்புகள்	
1	தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்	14
2	நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட புள்ளி விவரம்	15
3	வருவாய் மற்றும் செலவு	16
4	வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்	17
5	எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்	17-19
6	பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம்	20
7	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள்	20-21
8	ஒழுங்கு நடவடிக்கைகள் மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம்	22-23
9	தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம்	24-25
10	தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம்	26
11	1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம்	27-30
12	அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம்	30
13	வரைபடங்கள்	31-32

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2005-2006

முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினொன்று என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பத்து உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு)	**தலைவர்**
டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**
டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**
திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,	**உறுப்பினர்**
திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,	**உறுப்பினர்**
திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,	**உறுப்பினர்**
பேராசிரியர். பா.ர. சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்.,	**உறுப்பினர்**
திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,	**உறுப்பினர்**
திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,	**உறுப்பினர்**
திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,	**உறுப்பினர்**
டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**
திரு. இராமேஷ் குமார் கண்ணா, இ.ஆ.ப., (01.12.2005 மு.ப. பணியேற்றார்)	**செயலாளர்**
திருமதி. சந்தியா வேணுகோபால் -சர்மா, இ.ஆ.ப.	**தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்**

மார்ச் 31, 2006இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி-1

பொது: பவள விழா ஆண்டு (1930-2005)

இந்தியாவில் மாகாண அளவில் லீ கமிஷன் (இந்திய அரசமைப்புச் சட்டம் 1919ன்படி) பரிந்துரையின் அடிப்படையிலும் சென்னை மாகாண சட்டமன்றத்தில் 1929ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் எண் XI இன்படியும் முதன் முதலில் 1930 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்வாணையம் அமைக்கப்பட்டதாகும். முதன் முதலில் தலைவர் ஒருவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டு, சென்னை தேர்வாணையம் (Madras Public Service Commission) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது, பின்னர் 1970 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் என மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவுற்றதை முன்னிட்டு (1930-2005) 2005 ஆம் ஆண்டில் பவள விழாவை (Platinum Jubilee) கொண்டாடியது அதற்கான வாழ்த்துரைகள், மேதகு இந்திய குடியரசு தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்சித் சிங் பர்னாலா ஆகியவர்களிடம் இருந்து பெறப்பட்டது.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலும் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையில் விழா நடைபெற்றது. விழாவில் பவள விழா ஆண்டு மலர் தமிழக முதல்வரால் வெளியிடப்பட்டது. மேலும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டி போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் தமிழக முதல்வரால் வழங்கப்பட்டது. 75 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் தேர்வாணைய தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I நேரடித் தேர்வு

1. **முதல் நிலைத் தேர்வு** **-ஏதுமில்லை -**

2. **முதன்மை எழுத்துத் தேர்வு :-**

தேர்வுகளின் எண்ணிக்கை	:	4
காலியிடங்களின் எண்ணிக்கை	:	2418
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	3,63,197

3. **நேர்முகத் தேர்வு :-**

தேர்வுகளின் எண்ணிக்கை	:	4
காலியிடங்களின் எண்ணிக்கை	:	1850
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	3075

4. **இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-**

இறுதி முடிவு செய்த தெரிவுகளின் எண்ணிக்கை	:	2
காலியிடங்களின் எண்ணிக்கை	:	24
இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	:	24

II. **இதர தேர்வு விவரங்கள்**

1. **துறைத் தேர்வு**

	மே 2005	டிசம்பர் 2005
விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	45,986	34,846
வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை	16,148	12,524

2. **அரையாண்டுத் தேர்வு**

2005 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	:	35
2006 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	:	55

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : ஏதுமில்லை

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் 551 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் : 87 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துகளை தெரிவித்த வழக்குகள் 402 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 474 நேர்வுகள்.

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

வரவு	3,15,16
செலவு	10,70,32

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. **அறிவிக்கைகள் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 5 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 5 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 2,468 விண்ணப்பித்தவர்கள் 3,79,363 ஆகும். வெளியிடப்பட்ட 5 பதவிகளுக்கான அறிவிக்கைப் பட்டியல், 2,468 காலியிடங்களின் எண்ணிக்கையுடன் உள்ள விவரங்கள் பின் இணைப்பு- 4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. **சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :**

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

பகுதி-2

நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 2 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 24 காலியிடங்களுக்கு இறுதியாக 24 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 2 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 2418 காலியிடங்களை நிரப்புவதற்கு 4 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 3,63,197 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வாய்மொழித் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 1850 காலியிடங்களை நிரப்ப 4 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 37 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 6 குழுமங்கள் முற்பகலும் மற்றும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 420 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 3075 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விவரங்கள் பின் இணைப்பு -5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி-3

தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள் :

- ஏதுமில்லை -

பகுதி -4

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 20 பணிகளில் 551 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:

அ. I. செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 2005-ல் நிலுவையில் இருந்த 33 வழக்குகள் உட்பட) — 1003

II (i) தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் — 590

(ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் — 141

(iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. — 23

(iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் — 350

III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் — 6

ஆ. I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் — 402

II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் — 144

III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் — 258

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

1)	மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	144	
		மாதம்	நாட்கள்
2)	குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	10	00
3)	தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	02	00
4)	தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	10	00
	எடுத்துக் கொண்ட மொத்த சராசரிக் காலம்	22	00

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 402 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு -8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 474 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

வரிசை எண் (1)	பணி வகை (2)	இசைவு அளிக்கப்பட்டவை (3)	இசைவு மறுக்கப்பட்டவை (4)
1.	மாநிலப் பணி	14	-
2.	சார்நிலைப் பணி	8	-
3.	அமைச்சுப்பணி	452	-
	கூடுதல்	474	-

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. *தற்காலிக நியமனங்கள்:*

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 6 நபர்களை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. 8 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கும் மேல் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

காலம் (1)	இசைவு அளிக்கப்பட்டது		இசைவு மறுக்கப்பட்டது	
	மாநிலப் பணிகள் (2)	சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3)	மாநிலப் பணிகள் (4)	சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5)
3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள்	-	5	-	-
12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள்	-	-	-	-
18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	-	1	-	-
24 மாதங்களுக்கு மேல்	-	8	-	-
கூடுதல்	-	14	-	-

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனம் தொடரத் தேர்வாணையம் 8 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரம் துறை வாரியாக பின் இணைப்பு- 10ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 87 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:

அரசால் 52 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 51 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. ஒரு நேர்வில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அது தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்கு உட்படாததாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு 320 (3)-ன் படி தேர்வாணையத்தினை கலந்தறியத் தேவையில்லாததாகவோ அமைந்துள்ளது.

7. விதி தளர்த்துதல்:

அறிக்கைக்குரிய ஆண்டில் எந்தநேர்விலும் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்படவில்லை.

பகுதி -5

தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

1) துறைத் தேர்வுகள்

2005-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 215பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 80,832 நபர்கள் விண்ணப்பித்தனர்.

வ.எண்.	விவரம்	மே - 2005	டிசம்பர்-2005
1.	தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை	107	108
2.	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	45,986	34,846
3.	தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	32,757	26,209
4.	தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை	16,148	12,524
5.	தேர்ச்சி சதவீதம்	49	48

2) அரையாண்டுத் தேர்வுகள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2005 மற்றும் மார்ச் 2006-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 35 மற்றும் 55 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2005 மற்றும் பிப்ரவரி 2006-ல் நடத்தியது. அதில் 138 மற்றும் 130 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

பகுதி - 6

அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 3 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு -1

(அரசாணை 2(டி) நிலை எண்.54, உள்துறை (கடும் மந்தனம்) நாள் 16.2.2005)

கோயம்புத்தூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் முன்னாள் துணை இயக்குநர் திரு.என். நமசிவாயம், என்பவர் மீது லஞ்சம் கேட்டு வாங்கியது தொடர்பாக நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்காக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மீது பிறப்பிக்கப்பட வேண்டிய ஆணை குறித்து, தேர்வாணையத்தின் கருத்தினை 2001-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் அரசு கோரியிருந்தது. அவ்வழக்கினை முழுமையாக பரிசீலித்த பிறகு, தேர்வாணையம், தனது கருத்தினை 29.9.2003 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்தது.

"ஒழுங்கு முறை நடவடிக்கை ஆணையரின் அறிக்கையில் பக்கம் 62ல் உள்ள இப்பொருளின் மீதான ஒழுங்குமுறை நடவடிக்கை ஆணையரின் குறிப்புகள் நியாயமானதாகவும் சரியானதாகவும் இருப்பதால், குற்றம் நிகழ்ந்திருக்கக்கூடிய சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது எனும் ஒழுங்குமுறை நடவடிக்கை ஆணையரின் முடிவுகளிலிருந்து மாறுபடத் தேவையில்லை. ஆகவே குற்ற அலுவலர்க்கு எதிராக சுமத்தப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாலும் மற்றும் குற்ற அலுவலர்க்கு வழங்கவிருக்கும் கட்டாய ஓய்வு எனும் அரசின் உத்தேச தண்டனையிலிருந்து மாறுபட எவ்வித காரணங்களுமில்லையென்பதாலும், ஓய்வூதிய விதி 39(1)ன் கீழ் கட்டாய ஓய்வு நாளில் அவருக்கு தகுதியுடைய முழு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையினை வழங்கலாம் என தேர்வாணையம் முடிவு செய்கிறது".

திரு.என்.நமசிவாயத்திற்கு, முழு ஓய்வூதியமும் வழங்குவதென்பது கட்டாய ஓய்வு எனும் தண்டனையை வலுவிழக்கச் செய்வதால், கட்டாய ஓய்வு எனும் தண்டனையோடு, அவருக்குத் தகுதியான முழு ஓய்வூதியத்தில் 2/3 பங்கு மட்டுமே வழங்குவதாகவும் மற்றும் பணிக்கொடை இன்றியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆகையால் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு ஆணை பிறப்பித்துள்ளது தெளிவாகிறது.

வழக்கு -2

(அரசாணை 3(டி) எண்.44, உள் (சிறை 1) துறை, நாள் 28.4.2005)

திரு.கே.வித்யாசாகர், சிறைத்துறை துணைத் தலைவர் தனது வருவாய்க்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்த குற்றத்திற்காக அவர்மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அவருக்கு தண்டனையாக அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.100/- வீதம் ஓராண்டிற்கு பிடித்தம் செய்ய உத்தேச முடிவெடுத்து அதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினை 7.10.93 நாளிட்ட கடிதம் மூலமாக அரசு கோரியது.

குற்ற அலுவலருக்கு சந்தேகத்தின் பலனை அளித்து குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவிக்குமாறு தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் "சந்தேகத்தின் பலன்" என்பது குற்றவியல் நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் துறை நடவடிக்கைகளில் "குற்றத்திற்கான சாத்தியக் கூறு" இருந்தாலே போதுமானது என அரசு தெரிவித்து தேர்வாணையத்தின் திருந்திய கருத்தினை கோரியது; தேர்வாணையம் குற்ற அலுவலருக்கு ஏற்கனவே அரசு உத்தேசித்த தண்டனையான மாதம் ரூ.100/- வீதம் ஒராண்டிற்கு ஓய்வூதிய வெட்டு என்பதற்கு பதிலாக மாதம் ரூ.250/- வீதம் அவருடைய வாழ்நாள் காலம் வரை பிடித்தம் செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

குற்ற அலுவலர் தொடர்பான வழக்கில் பணம் சார்ந்த இழப்பு எதுவும் அரசுக்கு இல்லாத நிலையில் தேர்வாணையம் தனது ஆலோசனையில் தெரிவித்தவாறு வாழ்நாள் காலம் வரை ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் என்பது ஓய்வூதிய விதிகளுக்கு மாறானது என அரசு தெரிவித்து குற்ற அலுவலர் மீது அதிகபட்ச தண்டனையாக மாதம் ரூ.100/- வீதம் ஒரு வருடத்திற்கு ஓய்வூதிய வெட்டு செய்யலாம் என தெரிவித்து தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினை கோரியது.

ஆனால் தேர்வாணையம் தனது 19.9.01 நாளிட்ட கருத்துக்களில் அரசின் கருத்தான "அரசிற்கு இழப்பு ஏற்படும் நிகழ்வுகளில் மட்டுமே வரையற்ற தொகையினை பிடித்தம் செய்யலாம்" என்பது தவறு எனவும், எனவே தேர்வாணையம் ஏற்கனவே வழங்கிய கருத்துக்களை வலியுறுத்தி குற்ற அலுவலரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.250/- வீதம் அவரது வாழ்நாள் காலம் வரை பிடித்தம் செய்வதற்கான காரணங்கோரும் குறிப்பாணையினை அவருக்கு வழங்கி அதன் மீதான அவரது பதிலை பெற்று மேற்கொண்டு நடவடிக்கை தொடருமாறு வலியுறுத்தியது.

தற்பொழுது அரசு தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு குற்ற அலுவலர் மீது அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.250/- வீதம் 3 வருடங்களுக்கு பிடித்தம் எனும் தண்டனை வழங்கி அரசாணை 3(D) எண் 44 உள் (சிறை 1) துறை நாள் 28.4.2005இல் ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு குற்ற அலுவலருக்கு தண்டனையாக அவரது ஓய்வூதியத்திருந்து மாதம் ரூ.250/- வீதம் அவரது வாழ்நாள் காலம் வரை பிடித்தம் செய்யும் காரணங்கோரும் குறிப்பாணையை அன்னாருக்கு வழங்கி அவரது பதிலை பெற்று நடவடிக்கை தொடருமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது அதிலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு -3</u>

(அரசாணை 2(டி) எண்.487, உள் (கடும் மந்தனம்) துறை, நாள் 9.11.2005)

திரு.கே.பிரேம்குமார், காவல்துறை கண்காணிப்பாளர் என்பவர் மதுரை கூடுதல் உதவி நீதிமன்றம் III-ல் வழக்கு (கடும் மந்தனம்) எண்.169/83 குறித்த விசாரணையில் கலந்து கொள்ளாமல் காலங்கடத்தும் முறையை மேற்கொண்டு நீதிமன்ற விசாரணையிலிருந்து தலைமறைவாய் இருந்ததன் விளைவாக பிணையில் விடத்தகாத உத்தரவு வழங்கும் நிலை ஏற்பட்டது மற்றும் மேற்படி வழக்கை செல்லாததாக்க பொய்யான ஆதாரமற்ற அறிக்கையின் பேரில் வழக்கு (சி.ஓ.பி.எண்.6693/2000) பதிவு செய்து சென்னை உயர்நீதி மன்றத்தில் பொய்சாட்சி கூறி ஏமாற்றியதால் கடுமையான குறைக் குறிப்புரைகள் அவர்பால் தெரிவிக்கப்பட்டு வழக்கு செலவுகளுக்கு அபராதமாக ரூ.10,000/-

செலுத்தும்படி சென்னை உயர்நீதி மன்றத்தால் உத்தரவிடப்பட்டது. இதன் மூலமாக கடமை மற்றும் நேர்மை நெறியிலிருந்து தவறி அரசுப் பணியாளர்களுக்கு ஒவ்வாத விதத்தில் செயல்பட்டு அதன் மூலம் 1973-ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் நன்னடத்தை விதி 20(1)-ஐ மீறியமைக்காக அவருக்கு அவரது ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் இரண்டாண்டுகளுக்கு நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அவர் அரசுக்கு அளித்த மறு ஆய்வு மனுவின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஜூன் 2005-ல் கோரியிருந்தது.

மறு ஆய்வு மனுதாரர் ஏற்றுக் கொள்ளும்படியான காரணங்கள் எதையும் மறு ஆய்வு மனுவில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்பதாலும் இந்நேர்வில் சட்டத்தை பாதுகாப்பவரே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு நாகரீகமற்ற முறையில் செயல்பட்டுள்ளதாலும், மேலும் அரசு மிகவும் கனிவு நோக்குடன் இந்த வழக்கில் குறைந்த தண்டனையையே அவருக்கு வழங்கியுள்ளது என்பதாலும், குற்றங்களின் கடுமையைக் கருத்தில் கொண்டு அவரது மறு ஆய்வு மனுவினை நிராகரிக்க தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையக் கருத்துக்கு மாறுபட்டு அவரது ஊதிய உயர்வை இரண்டாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து ஆணை வழங்கியுள்ளது.

மறு ஆய்வு மனுதாரர் புரிந்த குற்றங்களின் கடுமையைக் கருத்தில் கொண்டு அவரது மறு ஆய்வு மனுவினை நிராகரிக்க தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

ஆ. <u>தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை</u>

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் ஒரு வழக்கில் செயல்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு .-

<u>வழக்கு-I</u>

(அரசாணை பல்வகை எண் 337, நிதி (கூட்டுறவுத்தணிக்கை) துறை நாள் 08.09.2005)

கூட்டுறவு தணிக்கைத் துறையில், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவி அரசாணை எண். 253, நிதி (கூட்டுறவுத் தணிக்கை) துறை 31.03.1986-ல் வெளியிடப்பட்டுள்ள தற்காலிக விதிகள் மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் விதி 3(d) ன்படி இப்பதவிக்கான காலியிடங்கள் கீழ்க்கண்டபடி நிரப்பப்பட வேண்டும்.

> "இப்பதவிக்கான நிரந்தர காலியிடங்களில் 10 விழுக்காடு மாறுதல் பணிநியமனம் மூலம் நிரப்பப்படவேண்டும். அவற்றில் 6 விழுக்காடு இளநிலை உதவியாளர்களுக்கும், 3 விழுக்காடு தட்டச்சர்களுக்கும், 1 விழுக்காடு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III -ற்கும் ஒதுக்கப்பட வேண்டும். மீதமுள்ள 90 விழுக்காடு காலியிடங்கள் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும். "

அரசாணை எண் 337 நிதி (கூட்டுறவுத் தணிக்கை) துறை, நாள் 8.9.2005-ன்படி ஒரு முறை மட்டிலும் 1.10.2004-க்குரிய தேர்ந்த பெயர்ப்பட்டியலுக்காக மாறுதல் பணி நியமனம் மூலம் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவியை நிரப்புவதற்கு அரசால் விதி 3(d) தளர்த்தப்பட்டது மேற்கண்ட அரசாணை இத்தேர்ந்த பெயர்ப்பட்டியலின் ஒப்புதலுக்குப் பிறகு செல்லத் தகாததாகிவிடும்.

தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குட்பட்ட பதவிகளின் நியமன முறைகள் அல்லது பணிநியமனம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கொள்கைகள் சம்பந்தமாக முடிவுகள் எடுக்கப்படும் போது தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட அரசாணை வெளியிடும் முன்பு தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை, அரசாணை வெளியிடும் முன்பு ஏன் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கவில்லை என்ற காரணத்தை தெரிவிக்குமாறு அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. அரசு தனது பதிலில் தேர்வாணையத்தின் ஒப்புதல் தேவை என்ற போதும் கவனக் குறைவால் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் விடுபட்டுவிட்டதாகவும் இது தேர்வாணையத்திற்கு ஒரு இக்கட்டான நிலையை உண்டாக்கலாம் என்பதற்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வுகள் நேராவண்ணம் பார்த்துக் கொள்ளப்படும் மற்றும் தேவையான சமயத்தில் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு-12 ல் கொடுக்கப்பட்டுள்ளது,

ஏற்புரை:-

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும் மற்றும் துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக, ஆண்டு முழுவதும் உண்மையாகவும் மற்றும் திறமையாகவும் பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு)	**தலைவர்**
டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**
டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**
திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,	**உறுப்பினர்**
திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,	**உறுப்பினர்**
திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,	**உறுப்பினர்**
பேராசிரியர். பா.ர. சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்.,	**உறுப்பினர்**
திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,	**உறுப்பினர்**
திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,	**உறுப்பினர்**
திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,	**உறுப்பினர்**
டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,	**உறுப்பினர்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம். சென்னை-2.

ரமேஷ் சந்த் மீனா இ.ஆ.ப.,
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்
மற்றும் செயலாளர் பொறுப்பு

நாள் . 25 10 2006

பின் இணைப்பு - 1

31.3.2006 - இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

1.	துணைச் செயலாளர்	4
2.	சார் செயலாளர்	20
3.	கணக்கு அலுவலர்	1
4.	உதவி கணக்குஅலுவலர்	1
5.	ஆராய்ச்சி அலுவலர்	1
6.	நூலகர்	1
7.	முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர்	1
8.	பிரிவு அலுவலர்	72
9.	நேர்முக செயலாளர்	1
10.	உள்ளீடு விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி)	1
11.	உள்ளீடு விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி)	1
12.	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி)	8
13.	உதவி பிரிவுஅலுவலர் மற்றும் கணக்கர்	194
14.	நேர்முக உதவியாளர்	7
15.	நேர்முக எழுத்தர்	4
16.	தொலைபேசி இயக்குபவர்	2
17.	உதவியாளர்	99
18.	தட்டச்சர்	39
19.	ஊர்தி ஓட்டுநர்	9
20.	பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர்	23
21.	மின் தூக்கி இயக்குபவர்	1
22.	முதன்மை ஏவலர்	1
23.	அலுவலக உதவியாளர்	69
24.	காவலர்	6
25.	பெருக்குபவர்	4
26.	துப்புரவுப்பணியாளர்	3
27.	குடிநீர் வைப்பவர்	1

115-20—3a

பின் இணைப்பு - II

நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் - 2005-2006 ஆம் ஆண்டு

வரிசை எண்	பதவி, துறை மற்றும் பணியின் பெயர்	விண்ணப்பம் பெற்ற கடைசி நாள்	தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை						பெறப்பட்ட விண்ணப்பங்கள்	முதனிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்						இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்						தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி	குறிப்பு
				ஆதி	பழ	மிபிவ	பிவ	பொது	கூடுதல்				ஆதி	பழ	மிபிவ	பிவ	மற்ற	கூடுதல்	ஆதி	பழ	மிபிவ	பிவ	மற்ற	கூடுதல்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)
	I - மாநிலப் பணிகள்																									
1	உதவி அரசு வழக்குரைஞர், நிலை-II தமிழ்நாடு பொதுப்பணி	24 01 05	24 08 05 (பெண்கள்)	4 (1)	2	4 (2)	6 (2)	6 (2)	22 (7)	2660	-	1573	13 (4)	2	15 (9)	20 (11)	-	50 (24)	5 (1)	2	4 (3)	11 (6)	-	22 (10)	பிஎல்.,- 18, எம்எல்.,-4	1 -ஆதி, 5 பிவ பொதுபபோட்டியில தெரிவு பெற்றனர்
2	உடற்கல்வி இயக்குநர் தமிழ்நாடு அரசு சட்டக் கல்லூரிகளில், தமிழ் நாடு சட்டக் கல்விப்பணி	13 07 05	21.11 05	1	-	-	-	1	2	62	-	28	3	-	1	2	-	6	1	-	-	1	-	2	எம்.பிஎட்., -2	1 பிவ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றார
	கூடுதல்								24	2722	-	1601						56						24		

பின் இணைப்பு -3
(தொடர்பு பகுதி - 1)
2005-2006 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு விவரங்களின் அட்டவணை

இனங்கள் (1)	(ரூபாய் ஆயிரங்களில்) (2)
அ) வருவாய்	
விண்ணப்பப் படிவம் விற்பனை	1,19,74
துறைத் தேர்வுகள் கட்டணம்	50,30
நேரடித் தேர்வுகள் கட்டணம்	1,45,12
மொத்தம்	**3,15,16**
ஆ) செலவு	
அடிப்படைச் சம்பளம்	3,98,61
அகவிலைப்படி	2,70,16
மருத்துவச் செலவுகள்	11,92
ஏனையப் படிகள்	59,64
பயணச் சலுகைகள்	2,26
பயிற்சி	88
பயணச் செலவுகள்	1,31
தொலைப்பேசிக் கட்டணங்கள்	6,41
ஏனைய சில்லரைச் செலவுகள்	12,15
தொழில்சார் சிறப்புப்பணிகளுக்குத் தொகை கோருதல்	1,89,69
பரிசுகள் மற்றும் விருதுகள்	1,14
வாடகை/வரிகள்/தண்ணீர்	86
விளம்பரச் செலவுகள்	46,15
இயந்திரம் பராமரிப்பு மற்றும் வாங்குதல்	19,38
மோட்டார் வாகன எரிப்பொருள் செலவு	8,59
கூலி	13,18
மின்சாரக்கட்டணம்	9,78
கணிப்பொறி	15,18
பண்டிகை முன்பணம்	2,93
போக்குவரத்துக் கட்டணம்	10
மொத்தம்	**10,70,32**

பின் இணைப்பு - 4 (தொடர்பகுதி-I)
2005-2006 ஆம் ஆண்டு வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்

வ. எண் (1)	பதவி மற்றும் பணியின் பெயர் (2)	அறிவிக்கை நாள் (3)	காலியிடங்களின் எண்ணிக்கை (4)	பெறப்பட்ட விண்ணப்பங்கள் (5)
1.	உடற்கல்வி இயக்குநர் அரசு சட்டக்கல்லூரிகள் தமிழ்நாடு சட்டக் கல்விப் பணி.	13.06.2005	2	62
2.	உதவி அறுவை மருத்துவர் (பொது - 1295, தனித்தன்மை-530) தமிழ்நாடு மருத்துவப் பணி.	01.07.2005	1825	7,123
3,	கால்நடை உதவி மருத்துவர் தமிழ்நாடு கால்நடை பாராமரிப்பு பணி.	05.08.2005	250	1,365
4.	தொகுதி-IV பணிகள்.	16.08.2005	341	3,54,647
5..	தொகுதி-IV பணிகள் (உடல் ஊனமுற்றோர்).	02 02.2006	50	16,166
	கூடுதல்		**2468**	**3,79,363**

பின் இணைப்பு - 5 (தொடர்பகுதி-II)
2005-2006 ஆம் ஆண்டு நடந்த முதல் நிலைத்தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகள்

I. முதல்நிலை தேர்வு - ஏதுமில்லை,

II முதன்மை எழுத்துத்தேர்வுகள்

வ. வண்	பதவியின் பெயர் மற்றும் பணிகள்	காலியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்கள்	எழுத்துத் தேர்வு நடைபெற்ற நாட்கள்
1.	உடற்கல்வி இயக்குநர் அரசு சட்டக்கல்லூரிகள் தமிழ்நாடு சட்டக் கல்விப் பணி.	2	62	04.09.2005
2.	உதவி அறுவை மருத்துவர் (பொது மற்றும் தனித்தன்மை) தமிழ்நாடு மருத்துவப் பணி.	1825	7123	16.10.2005
3.	கால்நடை உதவி மருத்துவர் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை.	250	1365	20.11.2005
4..	தொகுதி-IV பணிகள்.	341	3,54,647	18.12.2005
	கூடுதல்	**2418**	**3,63,197**	

III. வாய் மொழித் தேர்வு விவரம்

வ. எண்.	நாள்	பதவி மற்றும் பணியின் பெயர்	குழுமம்						அனுமதிக்கப் பட்டவர்கள்
			I	II	III	IV	V	VI	
(1)	(2)	(3)	(4)		(5)	(6)	(7)	(8)	(9)
1.	16 08.2005	உதவி அரசு வழக்குரைஞர், நிலை-2, தமிழ்நாடு பொதுப்பணி	10	10	10	10	10	0	50
2	29.09.2005	உதவி இயக்குநர், தொழில் மற்றும் வணிகம் (நில அளவை மற்றும் புள்ளியியல்)துறை தமிழ்நாடு தொழிற்பணி	3	0	0	0	0	0	3
3.	21.10.2005	உடற்கல்வி இயக்குநர், தமிழ்நாடு சட்டக்கல்லூரிகள் தமிழ்நாடு சட்டக் கல்விப்பணி	6	0	0	0	0	0	6
4.	18.01.2006	உதவி அறுவை மருத்துவர் (பொது/சிறப்பு) தமிழ்நாடு மருத்துவப்பணி	15	15	15	15	15	15	90
	19.01.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	20.01.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	23 01 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	24.01.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	25 01.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	27.01.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	30 01 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	31.01 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	01 02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	02.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	03.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	06.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	07.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	08.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	09.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	13.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	14.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	15.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	16.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	17 02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	20.02 2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	21.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	22.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	23.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	24.02.2006	- மேற்படி-	15	15	15	15	15	15	90
	27.02.2006	- மேற்படி-	15	15	16	16	16	16	94

(1)	(2)	(3)	(4)		(5)	(6)	(7)	(8)	(9)
	28 02 2006	- மேற்படி-	16	14	16	16	14	14	90
	01.03.2006	- மேற்படி-	16	16	14	12	16	16	90
	02.03 2006	- மேற்படி-	16	16	14	12	18	14	90
	03.03.2006	- மேற்படி-	16	18	15	15	14	15	93
	06 03.2006	- மேற்படி-	15	15	15	16	16	16	93
	07.03 2006	- மேற்படி-	15	15	16	15	15	15	91
	08.03.2006	- மேற்படி-	7	7	6	7	8	0	35
மொத்தம்			**525**	**516**	**512**	**509**	**517**	**496**	**3075**

பின் இணைப்பு - 6

(தொடர்பு பகுதி -3)

பொருத்தமும் தகுதியும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை குறித்த விவரம்

- ஏதுமில்லை-

பின் இணைப்பு -7

(தொடர்புப்பகுதி -4)

பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட விவரம்

வ. எண்.	பதவியின் பெயர்	பணியின் பெயர்	தெரிவு செய்யப்பட்டோரின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1	உதவி இயக்குநர், வேளாண்மைத் துறை	தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கம் பணி	51
2	உதவி கட்டடக் கலைஞர், பொதுப் பணித் துறை	தமிழ்நாடு கட்டடப்பணி	3
3	செயலாளர் வேளாண்மை விற்பனைக் குழு	தமிழ்நாடு வேளாண் விற்பனைப் பணி	9
4	மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்	தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல பணி	1
5	துணை இயக்குநர், கூட்டுறவு தணிக்கைத் துறை	தமிழ்நாடு கூட்டுறவுப் பணி	20
6	துணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்,	தமிழ்நாடு கூட்டுறவுப் பணி	55
7	தலைமை கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர்	தமிழ்நாடு மின் ஆய்வு தலைமையகப் பணி	4
8	தலைமை வரைவு அலுவலர்	தமிழ்நாடு பொறியியல் பணி	11
9	உதவி செயற்பொறியாளர், (கட்டிடம் மற்றும் மின்சாரம்) பொதுப்பணித் துறை	தமிழ்நாடு பொறியியல்பணி	81
10	உதவி இயக்குநர், மீன்வளம்	தமிழ்நாடு மீன்வளப்பணி	3
11	காவல் துறையில் நேர்முக உதவியாளர் (நிர்வாகம்)	தமிழ்நாடு பொதுப்பணி	113
12	நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்	தமிழ்நாடு பொதுப்பணி	1
13	துணை இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	1
14.	நிர்வாக அலுவலர் நெடுஞ்சாலை துறை	தமிழ்நாடு பொதுப் பணி	3
15.	நிர்வாக அலுவலர் வேலைவாய்ப்புத் துறை	தமிழ்நாடு பொதுப் பணி	7
16,	நிர்வாக அலுவலர் வேளாண்மை துறை	தமிழ்நாடு பொதுப் பணி	6
17	காவல் துணைக் கண்காணிப்பாளர் (தொழில் நுட்பம்)	தமிழ்நாடு பொதுப்பணி	5
18	உதவி ஆணையாளர் (வகை-25) வருவாய் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	2

(1)	(2)	(3)	(4)
19	நிர்வாக அலுவலர் கால்நடை பராமரிப்பு துறை	தமிழ்நாடு பொதுப்பணி	8
20	நேர்முக உதவியாளர் / நிர்வாக அலுவலர் மீன்வளத் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	3
21	சார் செயலாளர் தலைமைச் செயலகம் நிதித் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	10
22	உதவி இயக்குநர் தேசிய மாணவர் படைத்துறை	தமிழ்நாடு பொதுப்பணி	1
23	வட்டார தணிக்கை அலுவலர் இந்து சமய அறநிலையத் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	2
24	தலைமை வனப் பாதுகாவல் அலுவலரின் நேர்முக உதவியாளர் வனத் துறை	தமிழ்நாடு பொதுப் பணி	2
25	உதவி இயக்குநர் நில அளவை மற்றும் ஊரமைப்புத் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	4
26	நிர்வாக அலுவலர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	1
27	சிறைத் துறை கண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர்	தமிழ்நாடு பொதுப்பணி	1
28	உதவி ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	2
29	நேர்முக உதவியாளர் சிறுதொழில் துறை	தமிழ்நாடு பொதுப்பணி	1
30	மண்டல நன்னடத்தை அலுவலர் சிறைத்துறை	தமிழ்நாடு சிறைகள் பணி	2
31	முதுநிலை பூச்சியியலர் மற்றும் நோய் தடுப்பு மருந்து தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு துறை	தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுப் பணி	6
32	முதுநிலை பகுப்பாய்நர் மக்கள் நல்வாழ்வுத் துறை	தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுப் பணி	4
33	காவல் துணைக் கண்காணிப்பாளர் (கைரேகை பதிவு)	தமிழ்நாடு காவல் பணி	15
34	காவல் துணைக் கண்காணிப்பாளர் (வகை-2)	தமிழ்நாடு காவல் பணி	4
35	மாவட்டப் பதிவாளர் பதிவுத் துறை	தமிழ்நாடு பதிவுப்பணி	6
36	உதவி இயக்குநர் / நேர்முக உதவியாளர் எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை	தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணி	2
37	உதவி இயக்குநர் நில அளவை மற்றும் நிலப்பதிவேடுகள்	தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலப்பதிவேடுகள் பணி	7
38	உதவி இயக்குநர் புள்ளியியல் துறை	தமிழ்நாடு புள்ளியியல் பணி	12
39	வட்டார போக்குவரத்து அலுவலர் போக்குவரத்துத் துறை	தமிழ்நாடு போக்குவரத்துப் பணி	4
40	கூடுதல் கருவூல அலுவலர் கருவூலம் மற்றும் கணக்குத் துறை	தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குப் பணி	26
41	கணக்கு அலுவலர் (வகை-III) கருவூலம் மற்றும் கணக்குத் துறை	தமிழ் நாடு கருவூலம் மற்றும் கணக்குப் பணி	52
கூடுதல்			**551**

பின் இணைப்பு - 8

(தொடர்பு பகுதி - 4)

மேல் முறையீடு / மறு ஆய்வு மனு / ஒழுங்கு நடவடிக்கை/ ஓய்வூதியம் பிடித்தம் பற்றிய விவரங்கள்

வ. எண்	துறையின் பெயர்	மேல் முறையீடு/ மறு ஆய்வு / சீராய்வுமனுக்கள்		ஒழுங்கு நடவடிக்கை		ஓய்வூதியம் பிடித்தம்	
		குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை					
		நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள்	வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள்	நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள்	வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள்	நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள்	வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	வேளாண்மை	1	9	1	11	-	5
2	கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளம்	-	1	-	2	-	1
3	கல்வி	-	18	2	2	-	4
4	வணிக வரி மற்றும் அறநிலையத் துறை	1	57	-	6	-	3
5	உள்துறை	2	12	2	3	-	4
6	வருவாய்த்துறை	1	20	1	9	-	4
7.	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	-	4	-	-	-	-
8.	கூட்டுறவு	-	11	-	4	-	4
9	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு	-	6	-	1	-	1
10	சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனம்	-	10	2	6	1	2
11	நெடுஞ்சாலைத் துறை	1	6	1	3	-	1
12.	சிறு தொழில்கள்	-	5	-	-	-	2
13	செய்தி மற்றும் சுற்றுலாத்துறை	-	6	-	1	-	-
14	சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை	1	16	1	35	-	2

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
15	கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி மற்றும் கதர்	-	1	-	-	-	1
16	பொதுப் பணித்துறை	-	5	1	8	1	2
17	நிதி	-	5	-	1	-	-
18	சமூக நலம்	-	7	-	2	-	-
19	வீட்டுவசதி மற்றும் நகர்புறம்	-	2	-	-	-	-
20	பொது	-	-	-	1	-	-
21	ஊரக வளர்ச்சி	-	12	1	9	1	6
22	ஆதி திராவிடர் நலம்	-	2	-	-	-	-
23.	எரிசக்தி	-	1	-	-	-	-
24	தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு	2	9	-	3	-	2
25.	சட்டம்	-	1	-	-	-	-
26	எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை	-	1	-	-	-	-
	மொத்தம்	**9**	**227**	**12**	**107**	**3**	**44**

மேல் முறையீடு / மறு ஆய்வு / சீராய்வு மனுக்கள்	236
ஒழுங்கு நடவடிக்கை	119
ஓய்வூதியம் பிடித்தம்	47
மொத்தம்	402

பின் இணைப்பு - 9(தொடர்பு பகுதி - 4)

அ. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒழுங்குமுறை விதி 1954 - ல் விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு செய்த நியமனங்கள் -

1. மாநிலப்பணிகள்

வ. எண்	துறையின் பெயர்	பதவியின் பெயர்	நிகழ்வுகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1	தமிழ்நாடு மருத்துவபணி	உதவி அறுவை மருத்துவர்	1
2.	தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணி	விரிவுரையாளர்	2
3.	தமிழ்நாடு தொழிற்க் கல்விப் பணி	உடற் கல்வி இயக்குநர்	1
4	தமிழ்நாடு தொழிற்க் கல்விப் பணி	நூலகர்	1
5.	தமிழ்நாடு கால்நடை பராமரிப்புப் பணி	உதவி கால்நடை மருத்துவர்	1
6.	தமிழ்நாடு வேளாண்மைப் பணி	உதவிப் பொறியாளர்	1
7	தமிழ்நாடு மீன் வளப் பணி	முதல்வர்	1
8	தமிழ் நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்	முது நிலை ஆசிரியர்	6
	கூடுதல்		**14**

2. சார்நிலைப்பணிகள்

வ. எண்	துறையின் பெயர்	பதவியின் பெயர்	நிகழ்வுகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1	தமிழ்நாடு நகர் ஊரமைப்புப் பணி	திட்ட உதவியாளர்	6
2	சமுக நலம் மற்றும் மதிய உணவு திட்டம்	பள்ளி உதவியாளர்	1
3.	பொதுப்பணி	இளநிலைப் பொறியாளர்	1
	கூடுதல்		**8**

3. அமைச்சுப்பணிகள்

வ. எண்	துறையின் பெயர்	இளநிலை உதவியாளர்	தட்டச்சர்	கிராம நிர்வாக அலுவலர்	பதிவுரு எழுத்தர் /அலுவலக உதவியாளர்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	வருவாய்	42	1	51	-
2.	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம்	4	-	-	-
3.	சுகாதாரம் மற்றும் குடும்பநலம்	25	-	-	-
4	நெடுஞ்சாலை மற்றும் கிராமவளர்ச்சி	2	-	-	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
5	கைத்தறி மற்றும் கதர்	1	1	-	-
6.	சுற்றுச் சூழல் மற்றும் வனம்	5	1	-	-
7	எரிசக்தி	8	-	-	-
8	உயர் கல்வி	7	1	-	-
9	வணிகவரி மற்றும் அறநிலை	4	-	-	-
10	செய்தி மற்றும் சுற்றுலா	6	-	-	-
11.	வேளாண்மை	8	-	-	-
12.	பொது (முன்னாள் இராணுவத்தினர் நலம்)	1	-	-	-
13.	ஆதி-திராவிடர் நலம்	82	-	-	-
14	கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் நலன்	4	-	-	-
15	தொழில் மற்றும் வணிகம்	16	-	-	-
16	தொழிற் கல்வி	1	1	-	-
17	பொதுப்பணி	32	-	-	-
18.	பதிவுத் துறை	3	-	-	-
19	ஊரக வளர்ச்சி	53	-	-	-
20.	பள்ளிக் கல்வி	87	-	-	-
21.	புள்ளியியல்	2	-	-	-
22	சமூக நலம் சத்துணவுத்திட்டம்	1	-	-	-
23	சுரங்கம் மற்றும் தாதுப் பொருள்	-	-	-	1
24.	நாட்டு நலப் பணி	1	-	-	-
	கூடுதல்	**395**	**5**	**51**	**1**

1. **மாநிலப்பணிகள்** - 14
2. **சார்நிலைப்பணிகள்** - 8
3. **அமைச்சுப்பணிகள்** - 452

கூடுதல் - 474

ஆ. தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 16(பி) 1954-இன் பிற்பகுதியின்படி தேர்வாணைய இசைவு மறுக்கப்பட்டது.

- ஏதும் இல்லை -

பின் இணைப்பு -10

(தொடர்பு பகுதி -4)

தற்காலிக நியமனங்களுக்கு மாநிலப்பணி/ சார்நிலைப்பணி /அமைச்சுப்பணிகளில் 24 மாதங்களுக்கு மேல் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள்

வரிசை எண்	பதவியின் பெயர்	துறையின் பெயர்	நபர்களின் எண்ணிக்கை	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)
	மாநிலப்பணிகள்		- இல்லை-	
	சார்நிலைப்பணிகள்		-இல்லை-	
	அமைச்சுப்பணிகள்			
1	சுருக்கெழுத்து தட்டச்சர்	மண்டல வன அலுவலர், சமூக காடுகள், திருவண்ணாமலை	1	தற்காலிக நியமனம்
2	சுருக்கெழுத்து தட்டச்சர்	மாவட்ட நீதிபதி சிவகங்கை	4	தற்காலிக நியமனம்
3.	சுருக்கெழுத்து தட்டச்சர்	கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் புதுக்கோட்டை	1	தற்காலிக நியமனம்
4	இளநிலை உதவியாளர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	1	தற்காலிக நியமனம்
5.	இளநிலை உதவியாளர்	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை	1	தற்காலிக நியமனம்
		கூடுதல்	8	

இணைப்பு - 11
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
1930 முதல் இன்று வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் பட்டியல்

வரிசை எண்	தேர்வாணைய தலைவரின் பெயர்	பணிபுரிந்த காலம்	
		முதல்	வரை
1.	திரு. நார்மென் மேர்ஜோரிபேங்க்ஸ், கே.சி,ஐ.இ., சி.எஸ்.ஐ.,	03.01.1930	31.10.1932
2.	திரு,முகமது பசல் உல்-லா-சாயப் பகதூர், சி.எஸ்,இ.,ஒ.பி.இ.,	01.11.1932	31.01.1935
3.	திரு.ஆர்,டி. ரிச்மோண்ட், சி.இ. ஐ.,	01.02.1935	31.03.1940
4.	திரு. ஜான் ஆல், சி.எஸ்.ஐ., சி.ஐ.இ., ஒ,.பி.இ	01.04.1940	03.07.1946
5.	திரு. சிட்னி பர்ன், ஐ.சி.எஸ்	04.07.1946	03.01.1948
6.	திரு.டி.எம்.நாராயணசாமி	04.01.1948	02.01.1953
7.	திரு,பி.கே. ஞானசுந்தரம்	03.01.1953	14.03.1958
8.	திரு.வி.இரத்தினம்	20.03.1958	1963
9.	திரு.ஜே.சிவானந்தம், இ.ஆ.ப., (ஓய்வு)	1963	1969
10.	திரு.வி.பாலசுந்தரம், இ.ஆ.ப., (ஓய்வு)	1969	1972
11.	திரு.ஏ.ஆர்.சண்முகம், இ.வ.ப., (ஓய்வு)	1972	--
12.	திரு.எம்.ஏ. செரிப், இ.ஆ.ப., (ஓய்வு)	1972	--
13.	திரு.ஆர். இராமசுப்ரமணியன், பி.எஸ்.சி., பி.எல்.,	1972	24.03.1974
14.	திரு.ஜே.எ.அம்பாசங்கர், இ.ஆ.ப., (ஓய்வு)	05.04.1975	04.04.1980
15.	மேஜர் ஜெனரல் எஸ்.பி.மகாதேவன், எ.வி.எஸ்.எம்	30.6.1980	30.6.1986
16.	திரு. தி. லட்சுமிநாராயணன், இ.ஆ.ப., (ஓய்வு)	22.1.1987	21.1.1993
17.	திரு.சு.ரா.கருப்பண்ணன், இ.ஆ.ப., (ஓய்வு)	4.3.1993	21.8.1996
18.	திரு.து.முருகராஜ், இ.ஆ.ப., (ஓய்வு)	1.9.1996	21.4.2001
19	திருமதி.யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப., (ஓய்வு)	29.06.2001	பணியில் உள்ளார்.

பின் இணைப்பு - 11 (தொடர்ச்சி)
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
1930 முதல் இன்றுவரை உள்ள தேர்வாணைய உறுப்பினர்களின் விவரம்

வரிசை எண்	தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர்	பணிபுரிந்த காலம்	
		முதல்	வரை
1.	திரு. முகமது பசல் உல்- லா- சாயப் பகதூர், சி.ஐ.இ,. ஓ.பி.இ.,	03 01 1930	31.10 1932
2.	திரு. எம். இரத்தினசாமி, சி.ஐ.இ ,	03.01.1930	31 03 1940
3.	திரு. ஆர்.டி. ரிச்மோண்ட், சி.ஐ.இ.,	01.11.1932	31 01 1935
4.	திரு. ராவ். பகதூர் எம். நரசிம்மன் பந்துலகாரு	01 02.1935	30 03.1940
5.	திரு. என். ரெங்கநாதன்	15.06.1936	
6.	திரு. ராவ்பகதூர், சி.பி. கருணாகரன்	15 01 1938	23.01.1938
7.	திவான் பகதூர். கே.எஸ் மேனன்	24 01 1938	16.03 1938
8.	கான் பகதூர் முகமது ஜிந்தா சாகிப் மஹிர் சாகிப் பகதூர்	June- 1939	17 11.1939
9.	திவான் பகதூர் டி. ஆனந்த ஆச்சாரியா	01.04.1940	23 02 1945
10.	திரு. பி.கே. ஞானசுந்தரம்	1942	
11.	கான் பகதூர் ஜவாத் ஹூசேன்	1942	
12.	திவான் பகதூர். நாராயணசுவாமி	1944	
13.	கான் பகதூர். மிர் அமிருத்தின் சாகிப் பகதூர்	01 04.1947	31.03.1948
14.	திரு. பி.வி. நரசிம்ம ராஜு	14.04.1948	13 04.1953
15.	டாக்டர் எம். அப்துல் ஹக்	03 01.1953	14 03.1958
16.	திரு. ஏ.எஃப். மாஸ்கர்னஸ், இ.ஆ.ப., (ஓய்வு)	14.04.1953	14 04.1958
17.	திரு. வி ஆர். நாகராஜன், பி ஏ., பி.எல்.,	20.03.1958	19.01.1964
18.	திரு. ஏ.எம். அல்லா பிச்சை	08 07 1959	
19.	திரு எஸ். சின்னப்பன், பி.ஏ., பி.எல்.,	07.09.1963	07 01 1968
20.	திரு. வி. கே. அப்பாண்ட ராஜன், இ.ஆ.ப., (ஓய்வு)	04.05.1966	
21.	திரு. கே. இராஜசேகரன், பி.ஏ.,பி.எல்.,	20 06.1968	12 07.1971
22	திரு. எச். சையத் இப்ராகிம், எம்.ஏ., பி.எல்.,	24.06.1968	
23.	திரு. எஸ். எம். காமாலுதின்	08 01 1972	13.03 1975
24.	டாக்டர். பி.எஸ். குமாரவேலு, எம்.பி.பி.எஸ்.,	18 04 1972	30.06 1974
25.	திரு. சி. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., (ஓய்வு)	19 04 1972	11.03 1975
26.	திரு. ஏ. பழனிச்சாமி, பி.ஏ., எம்.ஏல்.,	26 06 1974	10 08.1978
27.	திரு. கே. பாண்டுரங்கன், பி.ஏ.பி.எல்.	10.04.1974	09.04.1980
28.	திரு. பி. சங்கரன், இ.ஆ.ப., (ஓய்வு)	01.07.1974	30.06.1980
29.	திரு. எஸ். சீனிவாசன், பி ஏ.பி.எல்.,	12.03.1975	11.03.1981
30.	திரு. எஸ்.எம். சுலைமான், இ.ஆ.ப., (ஓய்வு)	14.03.1975	14.03.1981
31.	திரு. எம். திருமலைசாமி, இ.ஆ ப., (ஓய்வு)	21.10.1978	11.08.1984
32.	திரு. எம். பெரியசாமி, இ.ஆ.ப., (ஓய்வு)	02.11.1978	01.11.1984
33.	டாக்டர். திருமதி. அம்பிகா சண்முகம், எம்.பி.பி.எஸ்., எம்.டி.,	30.06.1980	31.03.1984

வரிசை எண்	தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர்	பணிபுரிந்த காலம்	
		முதல்	வரை
34.	திரு. சி. ஜி. திருமால், இ.ஆ.ப., (ஓய்வு)	07 10.1980	03.08.1985
35.	திரு. எஸ் திருமலையப்பன், இ.ஆ.ப., (ஓய்வு)	04.04.1981	06.05 1986
36.	திரு. எம். அப்துல் சமத், பி.இ., எஃப்.ஐ.இ.,	04.04.1981	23.05.1984
37.	திரு. எம்.எஸ். அப்துல் காதர், பி.எஸ்.சி.,	10.08.1984	10.08.1990
38.	திரு. ஓ. ஏ. கனகசபை, பி.ஏ , பி.டி., பி.எல்.,	10.08.1984	29.06.1990
39.	திரு. ஏ. பொன்னம்பலம், பி.எஸ்.சி,. (பொறி)	13.08.1984	29.04.1989
40.	திரு. பி சுப்பராயன், எம்.ஏ.,	06.03.1985	21.05.1989
41.	திரு. பி.எல்., பொன்னுசாமி, இ ஆ.ப., (ஓய்வு)	18.12.1985	17 12.1991
42.	திரு. ஆர் பொன்னுசாமி, பி.ஏ ,	12.03.1986	17.08,1989
43.	திரு. யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு)	03.03.1987	18 06.1992
44.	திரு. சு. நாகேஸ்வரன், பி.,இ., எஃப்.ஐ.இ.,	25.06.1989	16.01.1993
45.	திரு. கா. பொன்னுசாமி, இ.ஆ.ப., (ஓய்வு)	29.06.1989	30.06.1993
46.	டாக்டர். ஐ. எஸ். சண்முகம், எம்.பி.பி.எஸ் , டி. ஆர்த்தோ , டி பி.எச்ஓய்.எஸ்., எம் &பி., (லண்டன்) எப்.எம்.எம்.சி	30.06.1989	24.04.1991
47.	திரு. ஜே. இராமலிங்கம், பி.இ.,	30.06.1989	10.04.1994
48.	திரு. வி. குருமூர்த்தி, பி.,இ., எஃப் ஐ.இ.,	01.07.1989	01.05.1993
49.	திரு. டி. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,	05.07 1989	27.08.1991
50.	திரு. எஸ். ஹமீது, எம்.ஏ.,	24 10.1990	14.07.1995
51.	திரு. ஜி செல்வகணபதி, எம்.ஏ.,	27.11.1990	15.09.1995
52.	டாக்டர். திருமதி. கே. நாயகம், எம்.ஏ., பி.எச்.டி.,	05.12.1990	04.12.1996
53.	திரு. எஸ்.டி. காசி ராஜன். இ.ஆ.ப., (ஓய்வு)	15.07.1991	12.08.1992
54.	டாக்டர். எம்.எஸ். இராமச்சந்திரன், எம்.பி.பி.எஸ்., எம்.டி.,	17.12.1991	05.10.1995
55.	திரு. சி. செல்லப்பன், இ ஆ.ப., (ஓய்வு)	30.04.1992	14.05.1996
56.	திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., (ஓய்வு)	15.07.1996	14.07 2002
57.	திரு. ஆர். குருசாமி, பி.ஏ., பி.எல்.,	24.07.1996	14.07.2002
58.	திரு. ஜி. அரங்கநாதன், எம்.ஏ எம்.பில்.,	15.07.1996	14.07.2002
59.	டாக்டர். எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி., டி.எஸ்.எஸ்.,	17.07 1996	16.06.2002
60.	திரு. எம். நாகூர்மீரான், பி.எஸ்.சி. பி எல்.,	15.07.1996	25.06.2001
61.	டாக்டர். திருமதி. ஜோதிபாய் செல்வின்ராஜ்., எம்.எஸ்.சி. பிஎச்.டி.,	15.07.1996	28.03.2002
62.	திரு. ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எல்.,	20.01.1997	10.03.2001
63.	திரு. எம். மணி., இ.கா.ப., (ஓய்வு)	22.01. 1997	21.01.2003
64.	திரு. சு. சம்பந்தம், எம்.ஏ., பி.எல்.,	17.07.2000	29.03.2001 பதவியிலிருந்து விலகிவிட்டார்
65.	திரு. வ. அழகுசுந்தரம், எம்.எஸ்.சி.,	21.07.2000	23.11.2004
66.	டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம் ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	27.03 2001	பதவியில் தொடர்ந்து உள்ளார்
67.	டாக்டர். திருமதி, கு.ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,	21.03.2001	பதவியில் தொடர்ந்து உள்ளார்

வரிசை எண்	தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர்	பணிபுரிந்த காலம்	
		முதல்	வரை
68.	திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ. பி.எல்.,	30.03.2001	19.10.2004
69.	திரு அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி. பி.எல்,	16.06.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
70.	திருமதி. பா.நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்,	16.06.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
71.	திருமதி. நீ.கு கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,	16.06.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
72.	பேராசிரியர். பா.ர. சுப்பிரமணியன். பி.எஸ்.சி., எம்.எல்.,	25.08.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
73.	திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,	25.08.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
74.	திரு. இரா செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,	23.08.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
75.	திருமதி. சி.டி. திலகவதி, எம். ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,	25.08.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்
76.	டாக்டர் ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பிஎச்.டி.,	10.12.2004	பதவியில் தொடர்ந்து உள்ளார்

<u>பின் இணைப்பு - 12</u>

(தொடர்பு பகுதி - 7)

தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து அரசு மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை- கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான விவரங்கள்

வரிசை எண்	ஆண்டு	தேர்வாணையத்தின் கருத்தில் இருந்து மாறுப்பட்ட வழக்குகள்	தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகள்
(1)	(2)	(3)	(4)
1	2001 - 2002	9	1
2	2002 - 2003	12	5
3	2003 - 2004	9	3
4	2004 – 2005	2	3
5	2005-2006	3	1

ANNEXURE - XIII / பின்இணைப்பு - XIII

DETAILS OF POSTS NOTIFIED AND VACANCIES IN THE LAST FIVE YEARS PERIOD
கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் காலியிடங்களின் விவரம்

NOTIFICATION



VACANCIES



NUMBER OF CANDIDATES SELECTED AND RECOMMENDED FOR APPOINTMENTS IN THE LAST FIVE YEARS PERIOD
கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



WRITTEN EXAMINATIONS CONDUCTED IN THE LAST FIVE YEARS PERIOD
கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



ANNEXURE - XIII / பின்இணைப்பு - XIII

NUMBER OF CANDIDATES RECOMMENDED FOR APPOINTMENT BY RECRUITMENT THROUGH TRANSFER/PROMOTION IN THE LAST FIVE YEARS
கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



DETAILS OF DISCIPLINARY CASES DISPOSED IN THE LAST FIVE YEARS PERIOD
கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விவரம்



DETAILS OF ORAL TEST HELD IN THE LAST FIVE YEARS PERIOD
கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட வாய்மொழித் தேர்வுகளின் விவரம்